**தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக் கிளை**
Tamil Education Development Council - United Kingdom
020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

02/08/2025

வளர்தமிழ் நூல்களைப் பயன்படுத்துகின்ற அனைத்துப் பள்ளி நிர்வாகிகள் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் வணக்கம்.

தற்போது நீங்கள் பள்ளி விடுமுறையில் இருப்பீர்கள் என்பதை நாம் அறிவோம். புதிய கல்வியாண்டின் தொடக்கத்தில் (எதிர்வரும் செப்ரெம்பர் 07.09.2025 ஞாயிற்றுக்கிழமை) உங்கள் எல்லோரையும் நாம் நேரடியாகச் சந்தித்து எதிர்காலச் செயற்பாடுகள் மற்றும் உங்கள் ஐயப்பாடுகள் அனைத்தையும் தெளிவு செய்வதற்கு நாம் அணியமாக உள்ளோம்.

இதற்கிடையில் பல குழப்பங்களை விளைவித்துப் பள்ளி நிர்வாகங்களைப் பிரித்து, தமது மாயவலைக்குள் வீழ்த்தும் முயற்சியில் சில தனியார், முழுமூச்சாகச் செயற்படுகின்றார்கள். **அவர்கள் தமக்குள் குழுக்களை உருவாக்கி, ஒழுங்கற்ற முறையில் தரவுகளை சேகரித்து உங்களை மாயவலைக்குள் சிக்க வைத்து ஒற்றுமையைச் சீர்குலைக்கத் தொடர்ந்து முயற்சிக்கின்றார்கள், முயற்சித்தும் வருகின்றார்கள்.**

உங்களின் பாதுகாப்புக் கருதி இவ்வாறான ஒரு சில முயற்சிகளை நாம் சட்ட ரீதியாக அண்மைக்காலத்தில் வெற்றிகரமாக முறியடித்துள்ளோம்,.
குறிப்பாக:

**1) அமைப்பு ஆள்மாறாட்டம் (Organisation impersonation) செய்யப்பட்ட இணையத்தள முகவரி**


எமது உத்தியோகபூர்வ இணையத்தள முகவரிக்கு "tedc.org.uk" நிகரான ஒரு அமைப்பு ஆள்மாறாட்டம் செய்யப்பட்ட "teadc.org.uk" என்ற முகவரியூடாக தரவுகள் சேர்க்கும் முயற்சி கடந்த 27.07.2025 இலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. இதற்கும் எமது அமைப்புக்கும் சட்ட ரீதியாக எவ்வித தொடர்பும் இல்லாத நிலையிலும், இந்த ஆள்மாறாட்டம் செய்யப்பட்ட தளம் ஊடாக பள்ளி நிர்வாகிகளாகிய நீங்கள் பதிவிடும் தரவுகள் உங்களைத் தரவு மீறல் செய்ததற்கான ஒரு இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்படுவீர்கள் எனும் கவலையுடன் Hosting நிறுவனத்துடன் (Name cheap limited) தொடர்பு கொண்டு இச் சட்டவிரோதமான முயற்சியை முறியடித்துள்ளோம்.



Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக் கிளை
Tamil Education Development Council - United Kingdom
020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

மேலும், உங்கள் பள்ளி மாணவர்களின் பெற்றோர்கள் / உங்கள் சக நிர்வாகிகள், நீங்கள் தரவு மீறல் செய்ததாக உங்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கக்கூடும் என்ற கவலையும் எங்களுக்கு இருக்கிறது, ஆகவே உங்களையும் இந்த மாயவலைகளுக்குள் இருந்து பாதுகாக்க நாம் கடமைப்பட்டுள்ளோம்.




**2) Adobe e-sign தளம் ஊடாக Adobe நிறுவனத்தின் terms and violation ஐ மீறி செயற்படுதல்**

உண்மைக்குப் புறம்பான தகவல்களுடன், ஒரு சில பள்ளிகளை அவர்களின் மாயவலைக்குள் உட்படுத்தி, கையெழுத்துக்களைச் சேகரித்துச் செயற்பட்ட முயற்சி, Adobe Abuse Team இச் செயலானது, தமது “**violation of Adobe’s terms and policies has occurred**” என ஆய்வின் பின்னர் மின்னஞ்சல் ஊடாக உறுதிப்படுத்தியுள்ளார்கள். (பிரதி இணைக்கப்பட்டுள்ளது.)

**தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக் கிளை**

Tamil Education Development Council - United Kingdom

020 8432 6999

07771 753525

admin@tedc.org.uk

www.tedc.org.uk


Adobe Trust & Safety
To: Admin - TEDC UK

Reply | Reply all | Forward

Fri 01/08/2025 13:33

Some content in this message has been blocked because the sender isn't in your Safe senders list. Trust sender | Show blocked content

⚠ Caution: This email originated from outside of the organisation. Do not click links or open attachments unless you recognise the sender and know the content is safe.

##- Please type your reply above this line -##

**Nick** (Adobe)
Aug 1, 2025, 9:32 a.m. ADT

Hi Admin - TEDC UK,

We are writing to follow-up on your report 811175 of a possible violation of Adobe's Terms of Use and Content Policies on **Adobe Sign.**

After investigating the matter, we have determined that a violation of Adobe's terms and policies has occurred. Appropriate actions have been taken to remediate the violation.

Thank you for reporting this issue to us and helping keep Adobe a safe and respectful environment.

Thanks,

Adobe

இச் சம்பவங்கள் அனைத்தும், எமது அமைப்புக்குள் சட்டவிரோதமாக செயற்பட்ட நபர்களை பணி நீக்கம் செய்யப்பட்டதன் தொடர்ச்சியில், வேறு சில நபர்களால் இவ்வாறான செயல்கள் ஒரு குழுவாக அரங்கேற்றப்படுகின்றன. இவர்களின் செயற்பாடுகள் பல, சட்டத்திற்கு முரணானதாக அமைவது அனைவரும் அறிந்ததே. ஆகவே, உங்களுடைய பள்ளியை முன்னிலைப்படுத்தி நீங்கள் இவர்களுடன் சேர்ந்து செய்யும் ஒவ்வொரு செயலும் சட்டத்திற்கு அமைவானவையா? என ஓரிரண்டு தடவை சிந்தித்துச் செயற்படுங்கள். இது காலத்தின் தேவையாகவுள்ளது.




Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக் கிளை
Tamil Education Development Council - United Kingdom
020 8432 6999
07771 753525
admin@tedc.org.uk
www.tedc.org.uk

பொறுப்புள்ள நிர்வாகிகளாகிய நீங்கள் இவ்வாறு செயற்படுவர்களை இனம் கண்டு நீங்கள் விழிப்புணர்வுடன் செயற்படுங்கள். கடந்த காலங்களைப் போல் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை ஐக்கிய இராட்சியக் கிளையுடன் தொடர்ந்து பயணிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். இந்த மாயவலைக்குள் நீங்கள் சிக்குப்படாது பயணிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நாங்கள் உங்களை நேரடியாகச் செப்ரெம்பர் மாதம் சந்தித்து மேலதிக தகவல்களைத் தரவுள்ளோம். எமக்கென்று பண்பாட்டு விழுமியச் சிறப்பியல்புகள் உண்டு. நாங்கள் அமைதியாக பண்பாடானமுறையில் எமது சந்திப்புகளை ஏற்படுத்துவோம். இதற்குள் பணிசெய்த ஒவ்வொருவரையும் நாம் மதிக்கின்றோம். அநாகரீகமான முறையில் கூட்டங்களை நடாத்திக் கல்விக் கட்டமைப்பு என்ற அடையாளம் இல்லாமல் கட்டமைப்பைச் சிதைக்கின்ற முறையில் நாம் எச் சந்திப்புகளையும் ஏற்படுத்தமாட்டோம். (இந்த மரபையும் அவர்கள் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்பதையும் நாங்கள் அவதானிக்கத் தவறவில்லை.)

மேற்படி விடயங்களைப் போல வேறு வடிவங்களில் தங்களை அணுகினால், தங்கள் ஐயங்களைத் தெளிவுபடுத்த விரும்பின் தயங்காமல் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். பள்ளி மட்டத்தில் நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவோ அல்லது நிர்வாகமாக இணைந்து எமது நிர்வாகத்துடனும் இயக்குநர்களுடனும் கதைப்பதற்கும் நீங்கள் கீழுள்ள தொலைபேசி எண்களைத் தொடர்பு கொண்டு தங்களுக்கான நேரத்தை ஒதுக்கீடு செய்து ஐயப்பாடுகளை தெளிவுபடுத்தமுடியும் என்பதனையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி
நிர்வாகம்
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சியக் கிளை.
02.08.2025

---

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை ஐக்கிய இராச்சியக் கிளையின் உத்தியோக தொடர்பு விவரங்கள்:

- மின்னஞ்சல் : admin@tedc.org.uk
- தொலைபேசி எண்கள்: 020 8432 6999 / 077 7175 3525 / 078 2649 3093 / 075 5486 2602

TEDC UK தகவல்தொடர்புகளின் நம்பகத்தன்மையை சரிபார்க்க, கீழே உள்ள இணைப்பைப் பயன்படுத்தி அதிகாரப்பூர்வ வலைத்தளத்தைப் பார்வையிடவும்.
https://tedc.org.uk/newsletters/



Registered office address: 162 Franciscan Road, London SW17 8HH
Company Reg No: 09147012